**மத்திய மாகாண சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்ரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கணனி அச்சுப்பரதிகளின் பிரகாரம் விசேட செயற்திட்டத்தின் கீழ் (உலக வங்கி உதவி) 560-74-4-3-2602 தலைப்பில் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 559,539,846 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு 7 இற்கு இணங்க அச்செலவு | இச்செயற்திட்டம் தொடர்பாக சுகாதார திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ரூபா 154,293 தொடர்பான நாட்குறிப்புக்கள் தவறுதலாக திறைசேரி அச்சுக் குறிப்புக்களில் பதியப்பட்டிருக்கவில்லை. தரவு முறைமைக்கு உரிய பெறுமதி பதியப்பட்டுள்ளது. | திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளில் சரியான செலவு காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 559,694,139 ஆக இருந்ததனால் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளுக்கும் இறுதிக் கணக்கிற்கும் இடையே ரூபா 154,293 வித்தியாசம் காணப்பட்டது. | | |
| (ஆ) | மாகாண வருமானத் திணைக்களம் 2020 ஆம் ஆண்டின் யூன் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை அறவிட்ட கடன் தவணைப் பணங்களுக்கு மேலதிகமாக ரூபா 265,633 தொகையான கடன் வட்டி கொடுப்பனவுகளும் கடன் தவணைப் பணக் கொடுப்பனவுகளாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டதனால் அத்திணைக்களத்தின் முற்பணங்கள் பீ கணக்கின் மீதியும் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கின் மீதியும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மேற்கூறிய கணக்கீட்டுக் குறைபாடு எங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் நாட்குறிப்பிற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | பிழையை சரி செய்தல் துரிதமாகச் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் ஒரு அமைச்சில் 06 திணைக்களங்களில், 03 அலுவலகங்களில் மற்றும் ஒரு ஆணைக்குழுவில் பயன்படுத்துகின்ற 80 வாகனங்களில் ரூபா 279,290,000 பெறுமதியான 30 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 50 வாகனங்கள் அந்த வாகனங்களை பதிவு செய்யும் உரிமையுள்ள நிறுவனங்களில் அல்லது தற்பொழுது பயன்படுத்துகின்ற நிறுவனங்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 9 வாகனங்களின் உரிமையானது திறைசேரி செயலாளர் அலுவலகத்தினால் பொறுப்பேற்க்கப்பட்டுள்ளன. உரிமை பொறுப்பேற்கப்படாத இரண்டு வாகனங்களில் ஒரு வாகனம் கௌரவ ஆளுனரினால் பயன்படுத்தப்படுவதுடன் அது பிரதம செயலாளர் மத்திய மாகாண சபைக்குச் சொந்தமானதுடன் ஏனைய வாகனங்கள் மத்திய மாகாண சுகாதார அமைச்சிற்குச் சொந்தமானதாகும்.<br><br>சபை செயலாளர் அலுவலகம் பயன்படுத்துகின்ற மூன்று வாகனங்கள் பிரதம செயலாளரிடம் உள்ளதுடன் | உரிய நிறுவனங்களில் பயன்படுத்துகின்ற பொறுப்பேற்க்கப்படாத வாகனங்களைப் பொறுப்பேற்று மதிப்பீடு செய்து வாகனங்களை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிரதம செயலாளரிடம் விசாரித்து அந்த வாகனங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாண கணக்காய்வுத் திணைக்களம் பயன்படுத்துகின்ற வாகனங்கள் மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் அலுவலகத்திடம் உள்ளதனால் இந்த அலுவலகத்தின் ஒரு சொத்தாக இனங்காணப்படவில்லை.

மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் பயன்படுத்துகின்ற 12 வாகனங்களை திணைக்களத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அமைச்சு பயன்படுத்துகின்ற பிரதம செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 02 வாகனங்கள் அமைச்சின் பெயரில் பொறுப்பேற்கப்படும்.

பிரதம அமைச்சின் கீழ் இருக்கின்ற CP PE -2892 கெப் வாகனம் மற்றும் பிரதம செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள CP KG -1295 ஆம் இலக்க மோட்டார் வாகனம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

CP PE -2896 ஆம் இலக்க வாகனமானது புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் பொறுப்பேற்க்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களம் 9

வாகனங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

விவசாய அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்துள்ள 26 வாகனங்கள் ''மத்திய மாகாண சபையின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின்'' பெயரில் பதிவு செய்து கொள்வதற்கும் மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பெயரில் பொறுப்பேற்கப்பட உள்ள ஏனைய 08 வாகனங்களை பொறுப்பேற்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மத்திய மாகாண நீர்பாசனத் திணைக்களம் பயன்படுத்துகின்ற உரிய 05 வாகனங்கள் விவசாய அமைச்சு செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த அனைத்து வாகனங்களையும் எதிர்காலத்தில் பொறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 540 – ஆளுனர்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு மற்றும் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் XIII ஆம் பந்தியின் பிரகாரம் உண்மையாக சேவையில் ஈடுபட்டுள்ளதாக உறுதிப்படுத்திக் கொள்ளாது ஆளுனரினால் அலுவலக வளவில் பல்வேறு உத்தியோகபூர்வ ஒன்றுகூடல் மற்றும் கலந்துரையாடல்களுக் காக பங்குபற்றியிருந்த திகதியில் காலி, கொழும்பு, நுவரெலியா ஆகிய கண்டி நகரத்திற்கு துாரத்திலுள்ள வெளிப் பிரதேசங்களில் ஆளுனருடன் | உத்தியோகபூர்வ வாகனங்களின் சாரதிகளும் பாதுகாப்பு வாகனங்களின் சாரதிகளும் கௌரவ ஆளுனர் திட்டமிட்டுள்ள கடமைகள் மற்றும் அவசரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள கடமைகளுக்காக சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்களின் கடமைகள் கௌரவ ஆளுனரின் ஒருங்கிணைப்பு செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்ட கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கௌரவ ஆளுனர் அலுவலக வளவில் பல்வேறு உத்தியோகபூர்வ சந்திப்புக்களிலும் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றுகின்ற சில சந்தர்ப்பங்களில் விசேட செயற்பாடுகளுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் காலி, கொழும்பு, நுவரெலியா ஆகிய கண்டி நகரத்திற்கு தொலைவிலுள்ள பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தும் அவை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை எனவும் இதன் பின்னர் சாரதிகளின் மேலதிக நேர வேலைப் படிகளையும் பயணச் செலவுகளையும் கொடுப்பனவு செய்யும் போது விசேட கவனம் செலுத்துமாறு கௌரவ ஆளுனரின் செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ வாகனங்களினதும் பாதுகாப்பு வாகனங்களினதும் சாரதிகளால் சமர்ப்பித்த ஒட்டுதல் பொழிப்புக்களுக்காக முறையான மேற்பார்வையின்றி பிழையாக மேலதிக நேரப்படிகளும் இணைந்த படிகளுமாக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 757,515 மற்றும் ரூபா 448,700 தொகைகள் ஆளுனரின் தனிப்பட்ட பதவியணியிலுள்ள சாரதிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் 7.3 ஆம் பந்தியின் ஆலோசனைகளுக்கு இணங்க ஆளுனர் பயன்படுத்துகின்ற 02 உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு 2020 மே மாதத்திலிருந்து 2022 ஏப்ரல் மாதம் வரை 24 மாத காலப்பகுதிக்காக எரிபொருள் படிக்கு மேலதிகமாக மேலதிக எரிபொருள் படியாக 6720.21 லீற்றர் தொடர்பாக ரூபா 930,020 செலுத்தப்பட்டிருந்தது. | 2021 செ்தெம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற ஆளுனர்கள் கூட்டத்தின’ தீர்மானத்தின் பிரகாரம் மத்திய மாகாண கௌரவ ஆளுனரினால் மாகாணத்திற்கு வெளியே கடமைகளுக்காக பயணம் செய்யும் போது அதற்காக செலவு செய்யப்படும் மேலதிக எரிபொருளின் அளவை மீள்நிரப்பல் செய்தல் இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) ஆளுனரின் செயலாளர் அலுவலகத்தினால் 2018 மே 23 ஆந் திகதிய 42 ஆம் இலக்க வவுச்சரின் மூலம் ஆளனரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 721,920 பெறுமதியான 55 அங்குல Samsung LED 02 தொலைக்காட்சிகள் (UA55H6400AKK) பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 2018 ,2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான பொருள் மீளாய்வு அறிக்கையில் பொருள் இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாத விடயங்களின் கீழ் பொருள் மீளாய்வு பதவியணியினர் மூலம் இத்தொலைக்காட்சி இயந்திரங்கள் பௌதீகரீதியாக காணப்பட்டன என இனங்காணப்பட்டிருக்கவில்லை.

2018 மே 23 ஆந் திகதிய 42 ஆம் இலக்க வவுச்சரின் பிரகாரம் 55 அங்குல 02 Samsung தொலைக்காட்சி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத்தொலைக்காட்சி இயந்திரம் தொடர்பாக 03 ஆம் இலக்க பொருள் இருப்பு பதிவேட்டில் 80 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தவறுதலாக அதில் ஒரு தொலைக்காட்சி இயந்திரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் 2019 யூன் 25 ஆந் திகதி Philips LED Smart TV- 55 அங்குல தொலைக்காட்சி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்த அலுவலகத்தில் காணப்பட்ட மற்றும் காணப்படுகின்ற 55 அங்குல தொலைக்காட்சி இயந்திரங்களின் எண்ணிக்கை 03 ஆகும். பௌதீகரீதியாக பின்வரும் விபரங்களைக் காட்டும் வகையில் ஆளுனரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் 02 இயந்திரங்களும் அலுவலகத்தில் 01 இயந்திரமும் காணப்பட்டது.

**ஆளுனர் உத்தியோகபூவ இல்லம்**

| வியாபாரப் பெயர் | Serial No | அளவு |
|---|---|---|
| Samsung | 03NK3K5K600 | 55” |
| JVC | 035123100015 | 55” |

**அலுவலக பிரதான மண்டபம்**

| வியாபார பெயர் | அளவு |
|---|---|
| Phillips LED Smart TV | 55” |

42 ஆம் இலக்க வவுச்சரின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 02 தொலைக்காட்சி இயந்திரங்கள் தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) பெறுமதி குறிப்பிடப்படாத காணியும் 03 கட்டிடங்களும் ஆளுனர் அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

மத்திய மாகாண ஆளுனர் அலுவலகத்தின் காணி இதுவரை அலுவலகத்தினால் பொறுப்பேற்றல் இடம்பெற்றிருக்கவில்லை. அதனால் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

நிறுவனத்தின் காணியையும் கட்டிடங்களையும் பொறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**1.5.2 தலைப்பு 541 – சபை செயலாளர் அலுவலகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 05 ஆண்டுகளுக்கு மேல் பழமையான மரணமடைந்த மாகாண சபை உறுப்பினரின் ரூபா 92,176 மீதியும் 16 ஆண்டுகளுக்கு மேல் பழமையான பதவியை விட்டுச்சென்ற மாகாண சபை உறுப்பினரின் ரூபா 157,114 கடன் மீதியும் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.3, 4.4, 4.5, 4.6 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 92,176 கடன் மீதி அறிவிட வேண்டியுள்ளதுடன் முன்னாள் மாகாண சபை உறுப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 157,114 கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 தலைப்பு 542 – பிரதம செயலாளர் அலுவலகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகாண சபை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதியை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | கட்டிடத்தின் உரிமையைப் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 543 – பிரதம செயலாளர் அலுவலகம் -ஆளணி மற்றும் பயிற்சி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதம செயலாளர் அலுவலகத்தின் ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவில் 3 கட்டிடங்களின் பெறுமதி | கட்டிடம் இன்றுவரை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு உரிய | கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கிறேன். | வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு 549 – மாகாண கணக்காய்வுத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகாண கணக்காய்வுத் திணைக்களம் மீளாய்வாண்டில் கணக்காய்வு செய்ய வேண்டிய 2551 நிறுவனங்களில் 305 நிறுவனங்கள் அதாவது 12 சதவீதமான நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க மீளாய்வாண்டில் கணக்காய்வு செய்யப்படாத நிறுவனங்களின் எண்ணிக்கை 88 சதவீதமாக இருந்ததுடன் கணக்காய்வினைத் திட்டமிடும் போது 04 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்த நிறுவனங்கள் (பாடசாலைத் தவிர்த்து) 304 ஆகக் காணப்பட்டது. | இந்த அலுவலகம் தொடர்பாக அங்கீகரித்த உள்ளகக் கணக்காய்வாளர்களின் எண்ணிக்கை 56 ஆகும். இன்றுவரை அப்பதவிக்காக ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்காததுடன் இந்த அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 22 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 08 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் மூலம் உரிய கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>மத்திய மாகாண சபையில் காணப்படுகின்ற 2551 அரசாங்க நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்காக இப்பதவியினர்கள் எவ்வகையிலும் போதியதல்ல எனக் குறிப்பிடுகிறேன். | பிரதான நிறுவனங்களையும் அதன் கீழுள்ள நிறுவனங்களையும் தனித்தனியாக இனங்கண்டு முன்னுரிமைப்படுத்தப்பட்ட கணக்காய்வினை திட்டமிடுதல் வேண்டும். |

**1.5.6 மத்திய மாகாணத்தின் வலயம் சார்ந்த பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டில் நிலையான சொத்துக்கிளிலிருந்து பதிவழிக்கப்பட்ட ரூபா 5,059,270 பெறுமானத் தேய்வினை மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவுகளிலிருந்து பெற்ற வருமானமாக (Income from the recurrent expenses) நிதி செயலாற்றல் | வலய பொருளாதார அபிவிருத்தி நிலையத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்ட இறுதி கணக்கறிக்கையினுள் ‘‘பிற்போட்ட வருமானம்‘‘ ஆக முன்னைய ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு பெறுமதியானது வருமானத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டு முன்னைய ஆண்டில் இலாப நட்ட கணக்கு தயாரிக்கப்பட்ட முறையே 2022 ஆம் ஆண்டிற்காகவும் இலாபநட்ட கணக்கு தயாரிக்கப்பட்டது எனக் குறிப்பிடுகிறேன். | பெறுமானத் தேய்வினை மீண்டுவரும் செலவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட வருமான கணக்கீடு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான மிகை அத்தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் காப்புறுதி பூட்கைகளுக்காக ஊழியர் சம்பளத்திலிருந்து அறவிடவேண்டிய பணத்தினை விட அதிக பணம் அறவிடப்பட்டதன் காரணமாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேர்ந்து நின்ற ரூபா 1,418,085 தொகையானது மேலதிகமாக அறவிடப்பட்ட காப்புறுதி கட்டணமானது காப்புறுதி வைப்பாக நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | வழங்கப்படுகின்ற காப்புறுதி உள்ளடக்கத்திற்கு நிகரான வகையில் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற பணத்திற்கு இணங்க எதிர்காலத்தில் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு காப்புறுதி கம்பனியுடன் நடவடிக்கை எடுப்பேன். | காப்புறுதி கம்பனியுடன் உடன்படிக்கை செய்த பணத்தை மிகைத்து அறவீடு செய்யாதிருத்தல் வேண்டும். |
| (இ) | 2008 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாண வலய ரீதியான பொருளாதார அபிவிருத்தி நிறுவன நியதிச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்கு அரசாங்க துறையின் அல்லது தனியார் துறையின் பதவியினர்களை சேர்த்துக்கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் | தாபன விதிக் கோவை மற்றும் மத்திய மாகாண நிதி விதிகளுக்கு மேலதிகமாக தேவையானது எனக் கருதுகின்ற ஒழுங்கு விதிகளானது முகாமைத்துவ சபை உத்தியோகத்தர்களுடன் இணைந்து கலந்துரையாடப்பட்டு வருவதுடன் அவ்வாறான ஒழுங்கு விதிக் கோவைகளை தயாரிப்பதற்காக தேவையான வரைபினைத் தயாரித்தல் எதிர்காலத்தில் இடம்பெறும் எனக் குறிப்பிடுகிறேன். | பதவியினர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையினை துரிதமாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வுத் திகதியான 2023 சனவரி 13 அந் திகதி வரையும் அவ்வாறான ஒன்று தயாரிக்கப்படவில்லை. | | |
| (ஈ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் சொத்துக்கள்முகாமைத் துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களினாலும் பயன்படுத்துகின்ற அரசாங்கத்தின் அனைத்து வாகனங்களையும் அந்த நிறுவனத்தின் பெயரிலேயே பதிவு செய்திருக்கும் தேவைப்பாடு கவனம் செலுத்தப்பட்டிருந்தும் வலயரீதியான பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய ரூபா 7,330,000 பெறுமதியான 05 வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய மாகாண கைதொழில் அமைச்சின் மோட்டார் வாகனங்களை வலயரீதியான பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அவ்வாறு செய்யக்கூடிய இயலுமை இல்லை என கைத்தொழில் அமைச்சு செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டது. பிரதம செயலாளர் அலுவலகத்தின் கெப் வாகனத்தை பொறுப்பேற்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட வில்லை. ஏனைய 03 வாகனங்கள் சம்பந்தமாக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டவாறு செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனம் பயன்படுத்துகின்ற வாகனங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பிரதச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 268 ஆவது அத்தியாயம் மற்றும் வீடமைப்பு நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 5/6(1) ஆம் பிரிவுகளுக்கு இணங்க ஒரு திட்டமின்றி 2010 ஆம் ஆண்டில் ரூபா 6,500,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட | பிரயாணிகளின் நலனை முன்னிட்டு நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடத்தினை உடைத்து அகற்றுதல் நடைமுறைச் சாத்தியமற்றது. தற்பொழுது இக்கட்டிடத்தின் பெறுமதி மிகவும் உயர்ந்ததாக உள்ளது. எனவே உரிய கட்டிடத்தினை உடைத்து அகற்றுதல் அரசாங்கத்திற்கு செய்யப்படும் ஒரு பாரிய நட்டமாவதுடன் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளுமாறு கொத்மலை பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. அக்கட்டிடத்தின் பெறுமதியையும் அமுல்ப்படுத்தும் | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் மற்றும் வீடமைப்பு அதிகாரச் சட்டத்தினை மீறாது நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடுகிதுல வாடிவீடு அதிகாரமற்ற ஒரு நிர்மாணமாகக் கருதி 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வலயரீதியான பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு கொத்மலை பிரதேச சபையின் தலைவரால் கட்டிடத்தை உடைத்து அகற்றுமாறு கட்டளை இடப்பட்டிருந்தும் அந்த ஆண்டின் போது கட்டிடத்தின் திருத்த வேலைகளுக்காக ரூபா 1,078,459 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. | அத்தியாவசியத்தினையும் கவனத்துப் பார்த்து உரிய செலவினை மேற்கொண்டு அக்கட்டிடத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கிறேன். | |
| (ஊ) | 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதியிலிருந்து 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை கடுகிதுல வாடிவீடு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கிரீன்பார்க் கோல்டிங்ஸ் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,167,023 பணம் 2023 சனவரி 16 ஆந் திகதியன்று கட்டிடத்தினை ஒப்படைத்து 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. | கிரீன்பார்க் கோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | நிலுவையான குத்ததைக் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | வலய ரீதியான பொருதார அபிவிருத்தி நிறுவனம் கொத்மலை பிரதேச சபையின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட புனாஓயா கால்வாய் நுழைவு வீதியினை | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட முதலாவது கட்டத்தின் குறைபாடுகளை துரிதமாக சரிசெய்வதற்கு அல்லது 13 மீட்டர் தூரத்திற்கு இன்டலொக் கல் பரப்புவதற்கான ரூபா 208,063 பணம் மற்றும் பரப்பப்பட்டுள்ள இன்டலொக் கற்களுக்கு இடையே கல்தூள் | மிகையாகச் செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது குறைபாட்டினை சரிசெய்வதற்கு நடவக்கை |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 241,419 பணம் ஒப்பந்தக்காரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்திற்காக கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த ரூபா 314,951 தொகையான குறைபாடுகளும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை என இரண்டாவது கட்ட பரீட்சிப்பின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | போடுவதற்காக ரூபா 96,888 பணமும் ஆக ரூபா 304,951 பணத்தை செலுத்துமாறு உரிய சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது எனவும் 2 ஆம் கட்டத்தில் ரூபா 101,747 தொகையான குறைபாட்டினை சரிசெய்வதற்கும் கொத்மலை பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டது. | எடுத்தல் வேண்டும். |

**1.5.7 தலைப்பு 550 – பிரதம அமைச்சு**

**1.5.7.1 மாகாண நூல் நிலைய சேவைகள் சபை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | சபை கொள்வனவு விலையில் 20 சதவீத இலாபத்தின் அடிப்படையில் விற்பனை விலையைக் கணிப்பதுடன் மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிட்ட விற்பனைகளின் பிரகாரம் அச்சிடப்பட்ட பொருட்களின் கிரயப் பெறுமதி ரூபா 647,347 ஆக இருந்த போதிலும் அது ரூபா 3,862,865 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதன் காரணமாக விற்பனைப் பொருட்களின் கிரயம் ரூபா 3,215,518 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு அச்சிட்ட பொருட்களின் விற்பனைக் கிரயம் ரூபா 3,215,518 ஆல் அதிகரித்து உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் நூல் நிலைய சேவைகள் சபையினால் தயாரிக்கப்பட்ட முதலாவது கணக்கு என்பதனால் இவ்வாறான குறைபாடு ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இருப்பு பதிவேட்டின் பிரகாரம் அச்சிட்ட பொருட்களின் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 1,184,977 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,000,973 ஆகக் காட்டியதன் காரணமாக இறுதி இருப்பு ரூபா 815,995 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 815,995 ஆல் அதிகரித்தக் காட்டப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | 2018 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மத்திய மாகாண வலயரீதியான பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து குத்தகைப் பணமாக மத்திய மாகாண நூல் நிலைய சேவைகள் சயையினால் அறவிடவேண்டிய ரூபா 3,145,011 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக மத்திய மாகாண பிரதம செயலாளர், பிரதம மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உரிய தரப்பினர்களை அழைத்து கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். | நிலுவையான பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.8 தலைப்பு 551 – உள்ளுராட்சித் திணைக்களம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாணத்தின் 05 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2019 இலிருந்து 2022 வரையான காலப்பகுதியல் வழங்கப்பட்ட 10 மிகைக் கட்டண சான்றிதழ்கள் தொடர்பாக ரூபா 8,682,675 தொகையான மிகைக் கட்டணம் உள்ளுராட்சி திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது 10 மிகைக் கட்டணங்களில் ரூபா 8,682,675 அறவிடப்பட்டுள்ளது அதாவது<br>• மாத்தளை மாநகர சபை – 02 மிகைக் கட்டணங்களில் அறவிடவேண்டியுள்ளது. ரூபா 2,337,907 (மேன்முறையீட்டுத் தீர்மானம் இன்னும் கிடைக்கவில்லை.)<br>• உடுநுவர பிரதேச சபையிடமிருந்து 02 மிகைக் கட்டணங்களில் ரூபா 1,020,465 மற்றும் ரூபா 64,820 தொகைகள் அறவிடப்படவேண்டியுள்ளன . | மிகைக் கட்டண பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | • இரத்தோட்டை பிரதேச சபையிடமிருந்து 02 மிகைக் கட்டணங்களில் ரூபா 3,619,800 அறவிட வேண்டியுள்ளது (மேன்முறையீடு இடம்பெற்றுள்ளது.)<br>• தம்புள்ள மாநகர சபையிடமிருந்து 03 மிகைக் கட்டணங்களில் ரூபா 408,773 அறவிட வேண்டியுள்ளது.<br>• குண்டசாலை பிரதேச சபையிடமிருந்து 01 மிகைக் கட்டணத்தில் ரூபா 1,230,910 அறவிட வேண்டியுள்ளது. (மேன் முறையீடு இடம்பெற்று வருகின்றது.) | |

### 1.5.9 தலைப்பு 552 – கல்வித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 15 வலய கல்வி அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் 505 அதிபர் வெற்றிடங்களுக்காக பதில் கடமை அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை கண்டி, தெனுவர, கம்பளை, கடுகஸ்' தோட்டை, வத்தேகம, நாவுல தெல்தெனிய, ஹங்குரன்கெத, மாத்தளை ஆகிய வலயங்களில் அதிபர் தரத்தில் 188 நபர்கள் மிகையாகக் காணப்பட்டனர். | பிரதம மற்றும் கல்வி அமைச்சின் மூலம் முறைப்படியாக அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இடஅமர்வு செய்யப்படும் வரை வெற்றிடமாகக் காணப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் சேவையின் I ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களின் மூலம் கடமையை மேற்கொள்வதற்காக பதில்கடமை அதிபர்களை நியமிக்கும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. | மிகையாக உள்ள அதிபர்களை அதிபர் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பாடசாலைகளுக் கு இணைத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹங்குரன்கெத வலயக் கல்வி அலுவலகத்தினால் ஹங்குரன்கெத மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்த | ஹங்குரன்கெத வலயக் கல்வி அலுவலகத்தினால் இடம்பெற்றுள்ள ஒழுங்கீனத்தில் | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு சட்டத்தின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைக் கணக்கில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் மாதம் வரையான மீதியானது ஆசரியர் சம்பளங்களை தவறாகப் பயன்படுத்தியதன் மூலம் ரூபா 14,239,938 தொகையான ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளது என வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் ரூபா 10,423,348 தொகை தற்பொழுது அறவிடப்பட்டுள்ளது. 2022 திசெம்பர் 31ஆந் திகதி வரை ரூபா 3,816,590 தொகை இன்னும் அறவிடவேண்டியிருந்தது. இது சம்பந்தமாக மத்திய மாகாண பிரதம செயலாளரினால் 2022 யூன் 08 ஆந் திகதிய CPC/CS/01/05/01/01/99 ஆம் இலக்கத்தின் கீழ் நியமிக்கப்படட தொடக்க புலனாய்வுக் குழு அறிக்கையானது மத்திய மாகாண பிரதம மற்றும் கல்வி அமைச்சு செயாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அது சம்பந்தமான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெளிப்படுத்தப்பட்ட மொத்தப் பணத்தில் இன்னும் அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்ட ரூபா 3,696,920 பணத்தை செலுத்துவதற்கு ஒழுங்கீனத்தை மேற்கொண்ட நபருக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மூலமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடக்க புலனாய்வின் பிரகாரம் கல்வித் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள இந்த ஒழுங்கீனத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளியான ஆசிரிய சேவையிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை வேலையாள் பதவியிலுள்ள ஊழியர் கடமையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டனர். | நடவடிக்கை எடுத்து ஏற்பட்ட நட்டத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தெல்தெனிய வலயக்கல்வி அலுவலகத்திற்கு அங்கீகரித்த பாடசாலை செயற்பாட்டு உதவியாளர் பதவி 63 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 137 நபர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதனால் 74 நபர்கள் மிகையாகக் காணப்பட்டனர். | அங்கீகரித்த பதவியினர்கள மிகைத்து பாடசாலை செயற்பாட்டு உதவியாளர்கள் காணப்பட்டிருந்தும் அந்த அனைத்து ஊழியர்களையும் பாடலாலைகளில் பல்வேறு செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தியுள்ள அதேவேளை வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள பாடசாலை செயற்பாட்டு உதவியாளர்கள் போதியதாக இல்லை என்பதனை மேலும் தெரிவிக்கிறேன். | மிகையான பதவியினர்களை தேவைப்பாட்டிற்கு இணங்க அங்கீகரித்துக் கொள்வதற்கு அல்லது வெற்றிடம் காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தெல்தெனிய வலயத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,919,102 கடன் மீதியானது 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தும் தெனுவர வலயத்தில் ஓய்வுபெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 78,363 கடன் மீதியினை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.3, 4.4, 4.5, 4.6 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெல்தெனிய வலயத்தில் இடம்மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளில் ரூபா 139,700 தொகை 2022 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 1,781,264 கடன் மீதி இன்னும் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ளது.<br>தெனுவர வலயத்தில் அறவிட வேண்டியுள்ள கடன் மீதி ரூபா 78,363 ஆகும். | சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 553 – மாகாண காணித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண காணித் திணைக்களத்தின் வருமானங்களை சேகரிக்கும் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 36 பிரதேச செயலகங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 31 சதவீதம் அதாவது ரூபா 34,093,392 வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தின் அளவினைக் குறைப்பதற்குத் தேவையான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிடுகிறேன். | நிலுவையாக உள்ள குத்தகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நீண்டகால குத்தகை அடிப்படையில் மாத்தளை இலங்கை வங்கி கிளைக்கு வழங்கப்பட்டிருந்த 0.2056 ஹெக்டயர் அரசாங்க காணியின் முப்பது ஆண்டுகள் குத்தகை காலம் 2017 | காணி ஆணையாளர் நாயகத்தின் 4/10/22146 ஆம் இலக்க 2021/08/02 ஆந் திகதிய கடிதத்தினை குத்தகை அங்கீகாரத்தின் அடிப்படையில் குத்தகை | குத்தகை செலுத்தாத காலம் தொடர்பான அனைத்து குத்தகைப் பணத்தையும் |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தும் நிகழ்கால மதிப்பீட்டின் பிரகாரம் புதிய குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்ளாமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எதுவித குத்தகைப் பணமும் அந்த வங்கி கிளையிலிருந்து அறவீடு செய்வதற்கு மாகாண காணித் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | அறவீடு செய்தல் இடம்பெற வேண்டியுள்ளது என்பதனால் அதில் குறிப்பிட்டவாறு குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்து மாத்தளை பிரதேச செயலகத்திற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பிரதேச செயலகத்தினால் அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.11 தலைப்பு 557 – மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் 2006 ஆம் ஆண்டில் வரைறுத்த உடதும்பர பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கிய ரூபா 1,950,000 கடன் பணத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரை 16 ஆண்டுகள் கடந்திருந்தும் அறவிட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 1,494,220 ஆகும். அவ்வாறே 1991 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டுகளில் பல சந்தர்ப்பங்களில் மினிப்பே பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கியிருந்த ரூபா 750,000 கடன் பணத்தில் 21 ஆண்டுகளிலிருந்து 31 ஆண்டுகள் வரையான கால வீச்சில் ரூபா 292,000 கடன் பணம் மாத்திரம் தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 458,000 கடன் மீதி தீர்த்துவைக்கவேண்டியிருந்தது. | உடுதும்பர பல்நோக்கு கூட:டுறவுச் சங்கத்தின் நிலுவைக் கடன் சம்பந்தமாக சட்ட உத்தியோகத்தரின் சிபாரிசின் அடிப்படையில் சங்கத்தின் கட்டிட வாடகை வருமானத்திலிருந்து செலுத்துவதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் சங்கத்தின் நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து ரூபா 316,280 பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் 2023 மே 22 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 1,272,320 எனவும் குறிப்பிடுகிறேன். மினிப்பே சங்கத்திற்கு ரூபா 5,000 தவணைப் பணமாக செலுத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. 2023 மே 22 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 433,000 ஆகும். | நிலுவைக் கடன் தவணைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் லேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்த 1,799 கூட்டுறவு சங்கங்களில் ஆண்டின் போது 1,127 கூட்டுறவு சங்கங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் 32 சதவீதம் அதாவது 358 சங்கங்களின் கணக்குகள் மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்டிருந்ததுடன் 68 சதவீதமான 769 சங்கங்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 297 சங்கங்களின் கணக்குகளுக்காக காலம் கடந்த கணக்காய்வு திட்டமிடப்பட்டிருந்தும் அவற்றில் 82 சங்கங்கள் மாத்திரம் கணக்காய்வினை முடிவுறுத்தியிருந்தன. | இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அனைத்து காலம் கடந்த கணக்காய்வுகளும் நிகழ்கால கணக்காய்வுகளும் முடிவுறுத்தப்படுவதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வினை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுதல் வேண்டும். |
| (இ) | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 06 எண்ணிக்கையான 46(1) பரீட்சிப்புகள் 2023 பெப்ரவரி 17 ஆந் திகதியளவில் 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் பரீட்சிப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்தி அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 46 (1) பரீட்சிப்புக்களை முடிவுறுத்தி 2023 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் அறிக்கைகளை வழங்காத உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. | அறிக்கைகளைப் பெற்று அதன் சிபார்சின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் ரூபா 104,936,000 பெறுமதியான ஒரு காணி பொறுப்பேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இக்காணியை குண்டசாலை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. | பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு அல்லது குண்டசாலை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.12 தலைப்பு 561 – மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் மூலம் திருத்த்பட்ட தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 03 அலுவலகங்களின் 13 அரசாங்க இல்லங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,120,541 வீட்டு வாடகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒதுக்கீடு செய்ய்பட்ட பட்டியல்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அறவிட வேண்டிய நிலுவையான உத்தியோகபுர்வ இல்லத்திற்காக அறவிட வேண்டிய நிலுவையான உத்தியோகபூர்வ இல்ல வாடகை அறவிடப்பட்டுள்ளது.<br><br>321/1 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து புதிய மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய நிலுவைப் பணம் தாதி கலாநிதி உத்தியோகபூர்வ இல்லம் 2019 யுலை 01 ஆந் திகதியிலிருந்து 2020 ஏப்ரல் மாதம் வரை நிலுவையான உத்தியோகபூர்வ இல்லப் பணம் மற்றும் திகன புனர்வாழ்வு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ள பட்டியல் படுத்தப்படாத 10 உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து 08 உத்தியோகபூர்வ இல்லங்களில் 2021 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை வாடகைப் பணத்தை குறைத்து அறவிட்டதன் காரணமாக காரணமாக அறவிடப்படாத நிலுவைப் பணத்தை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என | நிலுவையான உத்தியோகபூர்வ இல்ல வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தெரிவிக்கிறேன்.<br><br>குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக நிலுவையான வாடகைப் பணம் இதுவரை அறவிடப்படவில்லை. | |
| (ஆ) | 2019 மே 09 ஆந் திகதி மத்திய மாகாண பிரதம செயலாளரினால் உரிய பொறுப்பக்கூற வேண்டிய 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட கண்டி மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் சுகாதார உபகரணங்களுக்கு நிறம்பூசுதல் என்பதாக பிழையாக செலுத்தப்பட்ட ரூபா 3,114,905 பணத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையும் 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,584,716 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் சுகாதார உபகரணங்களுக்கு மைபூச்சுதலின் இன்னும் மிகைக்கட்டணம் இடுவதற்க உள்ள பணம் ரூபா 2,555,816 ஆகும். | மிகைக் கட்டணத்தை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | ஆரம்ப சுகாதாரத்தை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் மருத்துவ மற்றும் மருத்துவமற்ற உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கீகரித்த விபரக் குறிப்பிற்குப் புறம்பாக ரூபா 661,550 பொருள் மிகையாகச் செலுத்தி 15 குளிர்காப்பு பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் உரிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக மட்டுப்பாடுகள் காணப்பட்டதனால் மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டினுள் 15 குளிர்காப்பு பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்குப் புறம்பாக கொள்வனவு செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 நவம்பர் மாதத்திலிருந்து உலப்பனை பிராந்திய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளிக்காதிருந்தும் 2021 நவம்பர் மாதத்திலிருந்து 2022 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 1,638,105 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவையாற்றிய ஒரு மருத்துவ உத்தியோகத்தர் நிரந்தரமாக உலபனை பிராந்திய வைத்தியசாலைக்கு நிரந்தர இடமாற்றம் செய்யப்பட்டார். எனினும் இந்த வைத்தியர் உலப்பனை பிராந்திய வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தும் தற்காலிகமாக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதற்கு இணங்க அங்கே சேவைக்கு சமூகமளித்துள்ளார் என தெரிவிக்கிறேன். | சேவைக்கு சமூகமளித்துள்ளதனை உறுதிப்படுத்தி சம்பளம் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | மாகாண காதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளில் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 3,195,083 தொகையான மருந்துப் பற்றாக்குறைகள் இனங்காணப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 3,195,083 தொகையான மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. நிறுவனத்திலுள்ள பிரதான மருந்துக் களஞ்சியத்திலிருந்து பிரிவுகளுக்கு ஒரே தடவையில் மருந்துகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த அளவுகள் பிரதான பேரேட்டில் உள்ளடக்கப்படாது மருந்துகள் அனைத்தும் வழங்கியதன் பின்னர் பிரதான பேரேட்டில் பதிவு செய்யப்படுகின்றது. அவ்வாறு பிரதான பேரேட்டில் உள்ளடக்குவதற்கு முன்னர் கணக்காய்விற்கு உட்படுத்தியதனால் இப்பற்றாக்குறை சுட்டிக்காட்டப்பட்டது. பின்னர் பிரதான பேரேட்டினை நாளதுவரையாக்கியதன் | மருந்துகளை வழங்கும் போது நாளதுவரையாக பதிவு செய்ய வேண்டியதுடன் மருந்துகள் வழங்கியதன் பின்னர் ஆவணப்படுத்துதல் இடம்பெறாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் அந்த மருந்துகளில் பற்றாக்குறை இருக்கவில்லை. ஆண்டின் இறுதியின் போது மேற்கொள்ளப்பட்ட களஞ்சிய மீளாய்வின் போதும் அது பற்றி உறுதிப்படுத்தப்பட்டது. | |
| (ஊ) | மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு ஏற்பட்ட 79 விபத்துக்கள் தொடர்பான ரூபா 65,198,101 நட்டம் சம்பந்தமாக விபத்து இடம்பெற்று 01 ஆண்டிற்கும் 18 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தும் துரிதமாக நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்வதற்கும் ஏனைய பரீட்சிப்புக்களை முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்ருக்கவில்லை. | இது சம்பந்தமாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களிலுள்ள விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களையும் உரிய உத்தியோகத்தர்களையும் அழைத்து கூட்டம் நடாத்தி மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறைமையை தெரியப்படுத்தி தற்பொழுது நட்டத்தை அறவீடு செய்வதற்கும் ஏனைய பரீட்சிப்புக்களை முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பரீட்சிப்புக்களை தரிதமாக முடிவுறுத்தி நட்டத்தை அறவீட செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2016 இலிருந்து 2021 வரையான காலத்தில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சம்பளத்தை தயாரிக்கும் போது சம்பள கடமைகளை நிறைவேற்றிய இரண்டு உத்தியோகத்தர்களால் அவர்களின் மற்றும் அவர்களுக்கு நெருங்கியவர்களின் 14 வங்கி கணக்குகளுக்கு ரூபா 51,961,088 தொகையும் வங்கி கணக்கு இலக்கத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா 1,077,550 தொகையுமாக மொத்தமாக ரூபா 53,038,638 பணம் மோசடியாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் சம்பந்தமாக | கண்டி பிரதிப் பிராந்திய சுதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சம்பள மோசடி சம்பந்தமாக தற்பொழுது சம்பள கடமைகளைச் செய்த இரண்டு உத்தியோகத்தர்களின் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கையானது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் மூலம் நி.பி 104(4) இற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். மத்திய மாகாண சுகாதார அமைச்சின் கணக்காய்வுப் | இடம்பெற்றுள்ள நட்டம் முழுவதையும் அறவீடு செய்வதற்கும் மோசடி செய்த நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முறையான விசாரணைகளை நடாத்தி உரிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவக்கைகளை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரீட்சிப்புக்களுக்கு இணங்க வெளிப்படுத்தப்பட்டுள்ள பணத்தை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு 2022 சனவரி 05 அந் திகதி மற்றும் 2022 சனவரி 10 ஆந் திகதி பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களுக்கு பதிலாக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் ரூபா 200,000 பணத்தை கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்கிற்கு செலவு வைத்துள்ளது. | |
| (ஏ) | மாகாண சுகாதார திணைக்களத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் குறிக்கோளுக்கு முரணான 17 செயற்பாடுகளுக்காக ரூபா 43,726,909 மொத்த தொகை மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருந்தது. | • பிராந்திய வைத்தியசாலைகளில் மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் பதவியினர் உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தம் செய்தல்.<br>• வெளிக்கல சுகாதார சிகிச்சை மற்றும் குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தம் செய்தல்.<br>• பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களை மேம்படுத்துதல். | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | • கடுகண்ணாவை பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்திற்கு புதிய ஒரு கட்டிடத்தினை நிர்மாணித்தல் - தொடக்க வேலைகள் ஆகிய அத்தியவசியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (ஐ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 04 நிறுவனங்களில் காணப்பட்ட ரூபா 11,943,694 மொத்த தொகையான 34 இயந்திரங்களும் உபகரைணங்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததன் அடிப்படையில் பயன்படுத்தாது காணப்பட்டன. இவற்றினைப் பரீட்சித்து திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உபகரணஙங்கள் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு வழங்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட போதிலும் மீண்டும் மீண்டும் செயற்படாதிருந்ததனால் அவற்றினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்ததுடன் மேலும் திருத்தம் செய்ய முடியுமா என்பதனை பார்க்க முடியாது போனால் கைதவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கும் அவ்வாறு செய்ய முடியாதவைகளை கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மாகாண சுகாதார திணைக்களத்தின் ஓடும் நிலையில் காணப்படாத 42 வாகனங்கள் 01 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும் அவ்வாகனங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 04 வாகனங்களைத் திருத்தம் செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 7 வாகனங்களின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காககச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 02 வாகனங்கள் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 02 வாகனங்கள் உதிரிப்பாகங்கள் இல்லாததனால் திருத்தம் செய்வதற்கு அனுப்பிவைக்கப்படவில்லை. 05 வாகனங்களை பிரதம செயலாளருக்கு ஒப்படைப்பதற்கும் 03 வாகனங்களை கண்டி மாநகர சபைக்கு ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு | பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்ட வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருவதுடன் 02 வாகனங்கள் பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.<br><br>08 வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் 03 வாகனங்கள் தற்பொழுது நிறுவனத்திடம் காணப்படவில்லை. மிகுதி வாகனங்களில் 04 வாகனங்கள் செயற்படுவதுடன் இன்னும் ஒரு வாகனம் திருத்தம் செய்வதற்கும் மற்றைய வாகனம் பொறியியலாளரின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | |
| (ஓ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய அரசாங்க நிருவாக அமைச்சு செயலாளரின் 18/2001 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் உச்ச கால எல்லை 05 ஆண்டுகள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் இடமாற்ற முறைமைக்கு உட்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் கீழ் சேவையாற்றிய 213 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளிலிருந்து 31 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றி வருகின்றனர். | இந்த ஊழியர்களின் இடமாற்றமானது புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் வரை அமுல்ப்படுத்துவதற்கான இயலுமை இல்லாததுடன் அதன் காரணமாக வருடாந்த இடமாற்றத்தின் போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானவர்களுக்கே இடமாற்றம் செய்யக்கூடியதாக உள்ளது என்பதனால் ஒரே இடத்தில் அதிக காலம் இடமாற்றத்தினை வழங்க முடியாது நபர்கள் இருப்பதற்கு காரணமாக உள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 1.1.6 ஆம் பிரிவின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற 426 உத்தியோகத்தர்களின் ரூபா 21,045,704 கடன் மீதியானது 03 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் | இடமாற்றம் பெற்றுச் சென்ற 426 உத்தியோகத்தர்களின் ரூபா 21,045,704 கடன் மீதியில் தற்பொழுது ரூபா 37,000 தீர்த்துவைக்கப்பட்டு மிகுதி ரூபா 21,008,704 மீதியை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (க) | 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 1.1.7 ஆம் பிரிவின் பிரகாரம் இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள 348 உத்தியோகத்தர்களின் ரூபா 16,643,408 கடன் மீதி 03 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அம்மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள 348 உத்தியோகத்தர்களின் ரூா 16,643,408 கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மரணமடைந்த 15 உத்தியோகத்தர்களின் ரூபா 742,899 மீதியும் ஓய்வுபெற்றுச் சென்ற 115 உத்தியோகத்தர்களின் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,627,812 கடன் மீதியும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.3, 4.4, 4.5, 4.6 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் மீதி மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்டுகின்றது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (கி) | தொடர்ச்சியாகக் காணப்பட்டுவரும் மத்திய அரசாங்கத்தின் சுகாதார திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 171,988,242 முற்பண மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கணக்கீட்டுத் தவறினை தேடிப்பார்த்து எதிர்காலத்தில் சரிசெய்யவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | கட்டுநிதி மீதி தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

**1.5.13 தலைப்பு 562 – மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆயர்வேத மருந்து உற்பத்திச் சாலைக்கு 790 லீற்றர் | 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைக் குழு தீர்மானம் 26 | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் |

தேன் இருப்பினை கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு மற்றும் மாதிரிகளைப் பரீட்சித்து பெற்ற பெறுபேறுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது ஒரு வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டு உயர்ந்த விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இன் பிரகாரம் 790 லீற்றர் தேனை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் காணப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 480 லீற்றர் தேன் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த வழங்கல் தொடர்பான விலைப்பட்டியல் இன்னும் தீர்த்து வைக்கடப்பவில்லை. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அனைத்து மருந்து மாதிரிகளையும் பரீட்சித்ததன் பின்னர் ஆகக் குறைந்த விலை குறிப்பிட்ட தேனை கொள்வனவு செய்தல் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த விலை ரூபா 900 என்பதனால் சந்தையின் தேன் விலையுடன் ஒப்பிடும் போது இந்த விலை நடைமுறைச் சாத்தியமற்ற குறைந்த பெறுமதியைக் கொண்டிருப்பதனாலும் மதிப்பீட்டுக் குழு அங்கத்தர் தேனின் தரம் தொடர்பாக திருப்தி கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டிருந்தமையாலும் தேனுக்கான இலங்கை நியமத்திற்கு (SLS 464) இணங்கியுள்ளதா என்பதனைப் பரீட்சிப்பதற்கு பெறுகைக்குழு ஒன்றாக தீர்மானம் எடுத்ததன் பின்னர் வடமேல் மாகாண ஆயர்வேத திணைக்களத்தின் ஆய்வுகூடத்திலிருந்து பரீட்சிப்பு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க தேனின் மிகவும் முக்கியத்துவமான மதிப்பீட்டு பருமனளவிற்கு இணங்க SLS 464 வரையறைக்கு (Perameter) இணங்க விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு செய்ததன் பின்னர் SLS 464 குறிப்பிட்ட

குழுவின் சிரிசு மற்றும் அய்வுகூட அறிக்கை சிபாரிசின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | வரையறைக்கு அண்மித்ததான நியம தரத்துடன் தேனை கொள்வனவு செய்வதற்கு பெறுகைக்குழு தீர்மனித்துள்ளது. | |

**1.5.14 தலைப்பு 570 – மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அமைச்சின் ரூபா 32,875,000 பெறுமதியான 04 காணிகளும் பெறுமதி குறிப்பிடப்படாத 09 காணிகளும் பொறுப்பேற்க்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 02 காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீட்டு நடவக்கைகள் இடம்பெற்று வருகின்றன. 6 காணிகளைப் பயன்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன் தற்பொழுது அதிகாரசபையின் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கி கணக்கீடு செய்யப்பட்டுளளது. எனவும் அமைச்சின் ஒரு காணி தற்பொழுது நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். மிகுதி 04 காணிகளில் 03 காணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழும் மற்றைய காணி பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையினாலும் பயன்படுத்தப்பட்டு வரும் காணிகளாகும். | காணிகளைப் பொறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.14.1 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,291,196 தொகையான வைப்புக்களை வருமானத்திற்கு | ரூபா 1,291,196 தொகையான வைப்புக்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேன். | காலங்கடந்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள அதிகார சபையின் 219 கடைகளில் 196 கடைகளுக்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதி தொடர்பாக அறவிட வேண்டிய நிலுவையான கடை வாடகை ரூபா 15,565,370 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையும் அப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதில் 13 கடைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த கடை வாடகைகளுக்கு மத்தியில் 2023 மே 23 ஆந் திகதி வரை ரூபா 5,163,486 நியலவையான கடை வாடகையும் அவை தொடர்ரான ரூபா 21,719 மிகைக்கட்டணமும் அறவிடப்பட்டுள்ளன. | நிலுவையான கடை வாடகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கண்டி பல்வகை போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டம் முடிவடைந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாக இருந்த ரூபா 24,228,128 தொகையான செயற்திட்ட பணத்தை பயன்படுத்தி அதிகார சபையின் அனைத்து பதவியினர்களில் 71 சதவீதமானர்களுக்கு KMTT படிகளாக ஒரு மேலதிக படி செலுத்தப்பட்டது. | கண்டி பஸ்களை நிருவகிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஆரம்பக் கட்டத்தின் உடன்படிக்கை 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த போதிலும் இந்த நிருவகிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் கண்டி பல்வகை போக்குவரத்து நிலையத்தை நிர்மாணித்து முடிவடையும் வரை அமுல்ப்படுத்தும் பொறுப்பின் அடிப்படையில் அதற்காக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர் குழுவிற்காக ஆரம்ப கட்டத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டவாறே பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அனைத்து ஊழியர்களுக்கும் இல்லாது இந்த நிருவிகிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாத்திரம் பங்களிப்புச் செய்யும் ஊழியர் குழுக்களின் வேண்டுதலின் பிரகாரம் படிகள் செலுத்தப்பட்டன. | உடன்படிக்கையின் பிரகாரம் பதவியினர் படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். |

**1.5.14.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடனேதென்ன மெதகம்மெத்த வீதிக்கு காபட் பரப்பி அபிவிருத்தி செய்யும் வேலையின் திருத்திய மதிப்பீட்டின் 2.10 (ஆ) ஆம் வேலை விடயத்தின் 244.5 மெட்ரிக்தொன் Asphalt Binder களானது ஒரு அலகு ரூபா 13,892 வீதம் மொத்தமாக ரூபா 3,396,594 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக அதிகாரசபை Core thickness சராசரியாக 62.5 மில்லி மீற்றராக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலைப்பட்டியலில் அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் 244.5 மெட்ரிக் தொன் Asphalt Binder களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 05 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட ABB ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைக்கு இணங்க Core thickness சராசரியானது 30.8 மில்லி மீற்றாக இருந்ததனால் பயன்படுத்தப்பட்ட 123.5 மெ.தொன் Asphalt Binder இன் அளவினை மிகைத்து ஒப்பந்தக்காரருக்கு 121 மெட்ரிக் தொன்களுக்காக ரூபா 1,680,932 பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ABB Layer களின் Core மாதிரிகளை பெற்றுக்கொள்ளும் போது ABB அதிகமாக பரப்பிய மேற்பரப்பு பகுதிகள் இந்த Core மாதிரிக்காக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க Core மாதிரிகளின் சராசரியினைக் கொண்டு கணிக்கப்பட்ட பரப்பிய ABB அளவிற்கும் மதிப்பீட்டில் காணப்பட்ட ABB அளவிற்குமிடையே வித்தியாசம் காணப்படலாம். அதற்கிணங்க இந்த வேலைக்காக வேலைத்தளத்திற்கு கொண்டுவரப்பட்ட ABB அளவினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டது என தெரிவிக்கிறேன். | மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உடிஸ்பத்துவ கல்மல்ஓய வீதிக்கு காபட் பரப்பி அபிவிருத்தி செய்யும வேலையின் Asphalt Binder ஈடுபடுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையானது Asphalt Core Cutting (ABB) 11 சந்தர்ப்பங்களில் 03 சந்தர்ப்பங்களின் போது Core thickness (ABB) இன் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பூர்த்திசெய்யப்பட்ட அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் 300 மெட்ரிக் தொன் Asphalt Binder களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஆய்வுகூட பரீட்சிப்பு அறிக்கைகளில் (ABB) Core thickness இன் சராசரி பெறுமதியின் பிரகாரம் செலுத்த வேண்டிய Asphalt Binder களின் அளவு 199.16 மெட்ரிக் தொன்களாக இருந்ததனால் ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்திய 1 மெட்ரீக் தொன்னுக்கு ரூபா 13,025 வீதம் 100.84 மெட்ரிக் தொன்களுக்கு ரூபா 1,313,441 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | வீதியின் மேற்பரப்பினை (Uneven Surface) சமமட்டமாக்குவதற்காக எஸ்போல்ட் பைன்டர் ஈடுபடுத்தப்பட்டது. அதனால் Asphalt Core Cutting இன் கன அளவின் மூலம் கணிப்பீடு செய்தல் சரியானது அல்ல. அதற்கிணங்க கணிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறையினை ஏற்றுக்கொள்ள முடியாது. SSCM இற்கு இணங்க பயின்டர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்ட பயின்டர்களின் மெட்ரிக் தொன் அளவினை அடிப்படையாகக் கொண்டேயாகும். | மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையில் சம்பளம் பெறுகின்ற ஒரு சாரதி 2013 யூலை 02 ஆந் திகதியிலிருந்து மாகாண போக்குவரத்து மற்றும் மின்சார அமைச்சுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றியதுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 3,924,829 சம்பளமும் | 2013 யூலை 02 அந் திகதியிலிருந்து மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிரந்தர சாரதி பதவியில் நியமனத்தைப் பெற்றுக்கொண்டதுடன் சேவை அத்தியவசியத்தின் அடிப்படையில் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டார். மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் காணப்பட்ட சராசரி தேவைப்பாட்டின் | வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வெற்றிடம் காணப்பட்டிருந்தும் அதன் ஊழியர்களை ஏனைய நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்ளல் மேற்கொள்ளப்படா திருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| படியுமாக அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | அடிப்படையில் எதிர்காலத்தில் இந்த சாரதியை அதிகார சபைக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**1.5.15 தலைப்ப 571 – மத்திய மாகாண வீடமைப்பு திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மத்திய மாகாண வீடமைப்பு திணைக்களத்தினால் வீட்டுத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக நேரடி கடனின் கீழ் கூட்டுறவு மற்றும் சணச நிறுவனங்களின் மூலம் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுவரை 880 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,682,051 கடன் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் படிப்படியாக கடனை அறவீடு செய்தல் இடம்பெற்றிருந்தும் பின்னைய காலங்களில் கடனாளிகளினால் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளை மீறி கடனை செலுத்த தவறுதல் இடம்பெற்றுள்ளது. நி.பி 104(4) இன் பிரகாரம் விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் சிபாரிசுகள் கிடைத்ததன் பின்னர் பணிப்புரைகளை துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக உள்ள கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.16 தலைப்பு 581- புடவைக் கைத்தொழில் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) முற்பண கட்டுப்பாட்டு கணக்கினையும் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பினையும் ஒப்பீடு செய்த போது ரூபா 678,643 வித்தியாசம் காணப்பட்டது. | அம்பகமுவ கோரலையிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்து இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள 14 உத்தியோகத்தர்களின் கடன் மீதியை தீர்த்துவைக்கும் போது இடம்பெற்ற தவறின் காரணமாக இந்த வித்ததியாசம் உருவாகியுள்ளது. இந்த ஆண்டின் முடிவில் இதனை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்தை இனங்கண்டு தீர்த்துவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுமதி குறிப்பிடப்படாத 125 காணிகள் நிறுவனத்தினால் பொறுப்பேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 125 காணிகளையும் பொறுப்பேற்பதற்கு தெவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை பொறுப்பேற்று கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.17 தலைப்பு 583- மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண சபையின் 1990 இன் 09 ஆம் இலக்க மாகாண சபை விளையாட்டு நியதிச்சட்டத்தின் பிரகாரம் மாகாண விளையாட்டு நிதியத்தை தேற்றுவிப்பதற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை மாகாண விளையாட்டு நிதியம் தோற்றுவிக்கப்படவில்லை. | 1990 இன் 09 ஆம் இலக்க மாகாண சபைகள் விளையாட்டு நியதிச் சட்டத்தில் குறிப்பிட்ட விளையாட்டு நிதியத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது என தெரிவிக்கிறேன். | மாகாண விளையாட்டு நிதியத்தை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மத்திய மாகாண சபையின் 2018 இன் 02 ஆம் இலக்க திகன விளையாட்டு கட்டிடத் தொகுதி மற்றும் விளையாட்டு அபிவிருத்தி மன்ற நியதிச் சட்டத்தின் பிரகாரம் மத்திய மாகாண திகன விளையாட்டுத் தொகுதியின் நடவடிக்கைகளை நிருவகித்தல் பராமரித்தல் விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்காக மத்திய மாகாணத்தின் திகன விளையாட்டு கட்டிடத் தொகுதி மன்றத்தை உருவாக்குதல் மற்றும் அதனுடன் இணைந்த விடயங்களுக்காக ஒழுங்குவிதிகளை ஏற்பட்டுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | "மத்திய தமாகாணத்தின் திகன விளையாட்டு கட்டிடத் தொகுதி மற்றும் விளையாட்டு அபிவிருத்தி மன்றத்தின்" பெயரில் ஒரு கணக்கினை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என தெரிவிக்கிறேன். | நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 ஆம் ஆண்டின் அபிவிருத்திப் பிரேரணையின் பிரகாரம் பல்நோக்கு விளையாட்டு நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தின் பிரதம மற்றும் கல்வி அமைச்சினால் ரூபா 2,049,192 தொகைக்கு 1332 விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் பல்நோக்கு விளையாட்டு நிலையம் ஸ்தாபிக்கப்பட்ருக்காமையின் காரணமாக அந்த விளையாட்டு உபகரணங்கள் மத்திய மாகாணத்திலுள்ள உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அவை எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. | உரிய தொழில்சார் செயற்பாட்டு பங்குபற்றலுடனான உத்தியோகத்தர்கள் உள்ளுராட்சி நிறுவனங்களில் இல்லாமையும் அதற்குச் சமமமான தொழில்சார் செயற்பாட்டு பங்குபற்றலினை காட்டக்கூடிய மாகாண விளையாட்டு திணைக்களத்துடன் தொடர்புள்ள உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் இருந்தும் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டுப் பொருட்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 584- மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் ஒரு காணி பொறுப்பேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மத்திய மாகாணத்தின் காணி ஆணையாளரினால் இது சம்பந்தமாக 2022 திசெம்பர் 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது. | திணைக்களத்தின் காணியை துரிதமாக பொறுபேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.19 தலைப்பு 590- விவசாய அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாக அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் 5 ஆண்டுகளை மிகைத்ததன் பின்னர் இடமாற்ற கொள்கைக்கு உட்பட வேண்டிய போதிலும் மாகாண விவசாய அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இரண்டு உதவிப் பணிப்பாளர்கள், ஒரு பிரதிப் பணிப்பாளர், ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்றத்தினைப் பெற்றுக்கொள்ளாது 09 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றி வருகின்றன. | இது தொடர்பாக பிரதம செயலாளருக்கு தெரியப்படுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன். | சுற்றிக்கையின் பிரகாரம் இடமாற்றம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.20 தலைப்பு 591- மத்திய மாகாண விவசாய திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மாகாண விவசாய திணைக்களத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 நடைமுறைக்கணக்குகளின் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 307,199 தொகையான 162 காசோலைகள் சம்பந்தமாக மாகாண நிதி விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் தொடர்பாக காலங்கடந்த ரூபா 198,032 தொகையான 81 காசோலைகளை அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் மேலும் பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம் தொடர்பான 14 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு உரிய ரூபா 15,925 தொகை விவசாயிகளின் கணக்குகளுக்கு பணம் செலவு வைக்கப்பட்டதுடன் ரூபா 60,452.50 தொகையான 52 காசோலைகள் அரசாங் வருமானத்திற்கு | காலங்கடந்த காசோலைகளை வருமானத்திற்க்கு எடுத்துக்கொள்வதற்க்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுத்துக்கொள்ளப்பட்டது. ரூபா 32,789.50 தொகையான 15 காசோலைகள் தற்பொழுது தேறப்படாது காணப்பட்டது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் வர்த்தக ரீதியான விவசாய ஏற்றுமதி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் தெகிந்த மற்றும் வெலிகொடவத்த பிரிவுகளிலுள்ள விவசாயி நலனாளிகளுக்கு 70 சதவீத அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,212,376 மொத்தத் தொகையான 54 சிறிய நீர் வழங்கல் தொகுதிகளும் அவை தொடர்பாக வழங்கப்பட்ட 1500 லீற்றர் பிளாஸ்டிக் நீர் தாங்கிகளும் மற்றும் 500 லீற்றர் பசளை தாங்கிகளும் விவசாயிகளுக்கு வழங்கி 08 மாதம் அளவான காலம் கடந்திருந்தும் பரீட்சிப்பு திகதியான 2022 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரை அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | சிறிய நீர் வழங்கல் மற்றும் பசளை வழங்கல் தொகுதிகளுக்காக 1500 லீற்றர் நீர் வழங்கும் தாங்கிகளும் 500 லீற்றர் பசளை தாங்கிகளும் வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க தெகிந்த பிரிவில் தற்பொழுது இந்த உபகரண தொகுதிகள் பொருத்தப்பட்டு முடிவடைந்திருந்தன. வெலிகொடவத்த பிரிவில் பாதுகாப்பு மனை நிர்மாணித்தல் விவசாயத்தை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் மூலம் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் பசளை தாங்கிகளின் பகிர்ந்தளிக்கும் உபகரண தொகுதிகளை (நீர் தாங்கி மற்றும் பசளைத் தாங்கி உள்ளடங்கலாக) பொருத்துவதற்கு முடியாதுள்ளது என தெரிவிக்கிறேன். | அரசாங்க நிதி ஈடுபடுத்தப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேதனப்பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 9,096,411 செலவு செய்து 3 மண் ஆய்வுகூடங்கள் நவீனமயப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 43,613,714 தொகையான மண் ஆய்வுகூட உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2023 பெப்வரி 24 ஆந் திகதியில் உள்ளவாறு 09 மாதங்கள் கடந்திருந்தும் உரிய மண் பரிசோதனை நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆய்வுகூட | மண் ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் உபகரணங்களை கொள்னவவு செய்வதற்காக தொடக்க மதிப்பீட்டுப் பணம் ரூபா 24 மில்லியனாகும். 2021 ஆம் ஆண்டில் உருவாகிய பொருளாதார சிக்கலுடன் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விலை தீவிரமாக அதிகரித்ததனால் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் ரூபா 46 மில்லியனுக்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டி இருந்ததன் அடிப்படையில் திட்டமிட்டவாறு மண் ஆய்வு கூடத்தினை நவீனமயப்படுத்துவதற்கு மற்றும் | குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களும் ஏனைய உபகரணங்களும் கிடைக்காமையால் இந் நிகழ்ச்சித்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை இன்றுவரை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | ஆய்வுகூட பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பணத்தை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூடத்திற்குத் தேவையான இரசாயனப் பொருட்களுக்கு உள்நாட்டு சந்தையில் காணப்பட்ட தட்டுப்பாட்டினால் அவற்றை முழுமையாக கொள்வனவு செய்வது சிக்கலானதாக இருந்தது. தற்பொழுது ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கை முழுமையாக முடிவடைந்துள்ளதனால் உரிய ஆய்வுகூட பொருட்களின் தேவைப்பாடு பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்ற முடியும் என எதிர்பார்க்கிறேன். | |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் மாகாண நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கல்பாலம் பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 731,250 பெறுமதியான 2 காடு வெட்டும் இயந்திரங்கள் மூன்று வழி மின்சாரத்தினை வழங்குவதற்கு நிதி ஏற்பாடு இல்லாது 11/2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சிய வளவில் விளைவற்றுக் காணப்பட்டது. | கல்பாலம் பண்ணையின் சேதனப் பசளை உற்பத்திக்காக இந்த 02 இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் காணப்பட்ட நிதி ஏற்பாட்டுத் தட்டுப்பாடு மற்றும் செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இந்த இரண்டு இயந்திரங்களுக்காகவும் மூன்று வழி மின்சார முறைமையை ஸ்தாபிக்க முடியாதிருந்ததனால் இந்த இரண்டு இயந்திரங்களையும் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | மூன்றுவழி மின்சார முறைமையை ஸ்தாபித்து இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ரூபா 1,780,388 பெறுமதியான காலங்கடந்த 77 வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கண்டி பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் ரூபா 29,848 தொகையான இரண்டு செயற்திட்டங்களின் பிடித்துவைத்தல் பணத்தை விடுவிக்கும் நடவடிக்கைகளுக்காக மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளருக்கு கடிதம் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் மாத்தளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் 48 வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் 10 செயற்திட்டங்களின் ரூபா 2,971,672 பிடித்துவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் காலங்கடந்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கிறேன். | |
| (ஊ) | 04 ஆண்டுகளுக்கு மேல் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 200,690 தொகையான கடன் மீதியை தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.3, 4.4, 4.5, 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக கொழும்பு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசாங்கத்தின் சட்டத்தரணி ஒருவருக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.21 தலைப்பு 592- மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மத்திய மாகாண சபையின் நிதி விதி 378.2 இன் பிரகாரம் முற்பணக் கணக்கு நடவடிக்கையின் தேறிய மிகையானது மகாண | இலாபத்தில் ஒரு பகுதியினை மாகாண திறைசேரிக்கு அனுப்புவதற்கும் அப்பணத்தை மாகாண திறைசேரியின் ஒதுக்க கணக்காக பேணி முற்பணக் கணக்கிற்கு நிதி தேவைப்படுகையில் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபை வருமான தலைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மத்திய மாகண சபையின் மருந்து வழங்கல் முற்பணக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 22,411,955 தொகையான திரண்ட மிகை காணப்பட்டதுடன் அதனை வருடாந்தம் மாகாண சபையின் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடியுமான வகையில் ஒரு நடைமுறையினை மாகாண திறைசேரியினுடாக மேற்கொள்ளாததினால் மிகைப் பணம் அளவினை மருந்து தேவைப்பாட்டிற்காக கணக்கில் வைத்திருக்கப்பட்டது எனவும் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 2012 மார்ச் 29 ஆந் திகதிய PS/PCMD/SD/01/08 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படுகின்ற படிகளுக்காக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாது மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தில் திரண்ட பயணச் செலவுப் படிக்கு தகமையுள்ள மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி ஆலோசனை | தற்பொழுத மாகாண சபையின் அதிகாரங்கள் அமுல்ப்படுத்தப்படாததனால் மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுனர் அவர்களின் அங்கீகாரத்தின் கீழ் கால்நடை அபிவிருத்தி ஆலோசகருக்கு ஒரு செயற்கையான தெளித்தலுக்காக விவசாயிகளிடமிருந்து அறவிடுகின்ற ரூபா 700 பணத்தை திணைக்கள பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்ததன் பின்னர் அந்த வைப்புப் பணத்தில் 90 சதவீதமானவை மீளளிப்புச் செய்யப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தருக்கு செயற்கையாக தெளித்தல் சேவையை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் சனவரியிலிருந்து நவம்பர் வரை ரூபா 7,106,823 தொகையான போக்குவரத்து செலவு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 42 நானாவித அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கிடைத்த ரூபா 1,724,669 பணம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாது 03 மாதங்களிலிருந்து 02 ஆண்டுகள் வரையான காலம் பொதுவைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற நானாவித அபிவிருத்தி செயற்திட்டங்களிலிருந்து பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்ட செயற்திட்டங்களில் 5 செயற்திட்டங்களின் பணம் தற்பொழுது அரசாங்கத்தின் வருமானத்திற்கு கொண்டுவரப்’ பட்டுள்ளதுடன் ஏனைய செயற்திட்டங்கள் சம்பந்தமாக கால்நடை மருத்துவ அலுவலகத்திற்கு பல தடவைகள் தெரியப்படுத்தியிருந்தும் இன்று வரை உரிய செயற்திட்டங்கள் சம்பந்தமாக வவுச்சர்களை சமர்ப்பிக்காததனால் உரிய மீதியானது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதுடன் 2 ஆண்டுகளை மிகைத்ததன் பின்னர் அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயற்திட்ட பணத்தை உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஈ) | மாகாண நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் மற்றும் வரிசை அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அமுல்ப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் செல்முன்னேற்றம் தொடர்பாக பரீட்சித்த | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 4 கால்நடை மருத்துவ பிரிவுகளானது யடிநுவர, குண்டசாலை, மாத்தளை, நாவுல என்பவாகும். அதன் நிகழ்கால நிலைமை பின்வருமாறாகும். | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை காலத்திற்குப் பொருத்தமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| போது கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களின் 4 கால்நடை மருத்துவ பிரிவில் 7 செயற்திட்டங்களின் 10 நலன்பெறுனர்களுக்கு 50 சதவீதமான அரசாங்கத்தின் | **கால்நடை மருத்துவ பிரிவு** | **செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **நிகழ்கால நிலைமை** |
|---|---|---|---|
| பங்களிப்பின் கீழ் மொத்தமாக ரூபா 1,173,500 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளை அமுல்ப்படுத்துதல், நலன்பெறுனர்களை உரிய கைத்தொழிலில் நிலைபெறச் செய்வதற்கு ஊக்குவித்தல் ஆகிய செயற்பாடுகள் | யடிநுவர | 5 | 2 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவில்லை. ஒரு செயற்திட்டத்தின் இயந்திரம் ஏனைய கால்நடை மருத்துவ அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| நிறைவேற்றப்படாமையின் அடிப்படையில் நலன்பெறுனர்கள் செயற்திட்டங்களிலிருந்து வெளியேறுவதனால் வழங்கப்பட்ட உபகரணங்கள் பயன்பாட்டிற்கு | குண்டசாலை | 5 | மூன்று நபர்கள் அமுல்ப்படுத்தவில்லை. 2 செயற்திட்டங்கள் இறுதிக் கட்டத்தினை கடந்துள்ளது. |
| எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதன் காரணமாக இச்செயற்திட்டத்தினை | நாஉல | 2 | ஒரு செயற்திட்டத்தின் இயந்திரம் செயற்படாது உள்ளது. |
| அமுல்ப்படுத்துவதன் மூலம் எதிர்பர்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | மாத்தளை | 3 | ஒரு நலன்பெறுனர் செயற்திட்டத்திலிருந்து நீங்கியுள்ளார் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகதார திணைக்களம் முன்னைய ஆண்டுகளில் சிறிய அளவிலான பால் பண்ணை நிகழ்ச்சித்திட்டங்களையு | மத்திய களஞ்சியத்தில் காணப்படுகின்ற 24 வகையான பொருட்களில் 11 வகையான பொருட்கள் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன எனவும் 07 | கொள்வனவு செய்த உபகரணங்களை உரிய குறிக்கோள்களுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ம் திரவப் பால் உற்பத்திகளையும் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த பெறுமதி வெளிப்படுத்தப்படாத 24 வகையான உபகரணங்கள் தொடர்பான 105 பொருட்களை நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது மாகாண பணிப்பாளர் அலுவலகத்தின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. இப்பொருட்களில் சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டது என கணக்காய்விற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டிருந்தும் அப்பொருட்களை தனியாக இனங்காண்பதற்கான சான்றுகள் இருக்கவில்லை. | வகையான பொருட்கள் திரவப் பால் உற்பத்தியினை பிரபல்யப்படுத்தும் குறிக்கோளில் பாடசாலை மாணவர்களுக்கு திரவப் பாலினை வழங்கும் நிகழ்சிசத்திட்டத்திற்காக கால்நடை மருத்துவ அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் சுகாதார ரீதியான மற்றும் ஏனைய சிக்கல்களின் காரணமாக செயற்படவில்லை எனவும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கொள்வனவு செய்த சில பொருட்கள் இன்னும் மத்திய களஞ்சியத்தில் காணப்படுகின்றன எனவும் 05 வகையான பொருட்கள் சிறிய அளவிலான பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல், திரவப் பால் உற்பத்தியை பிரபல்யப்படுத்துதல், பால்சார்ந்த உப உற்பத்திகளை மேம்படுத்துதல் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கால்நடை மருத்துவ பிரிவு மட்டத்தில் இனங்காணப்பட்ட பொருத்தமான நலன்பெறுனர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கால்நடை மருத்துவ அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக தொடர் இலக்கம் 24 இன் கீழுள்ள பொருட்களை உரிய நலன்பெறுனர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | முற்பணங்கள் கட்டுப்பாட்டக் கணக்கினையும் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பினையும் ஒப்பீடு செய்த போது ரூபா 316,752 வித்தியாசம் காணப்பட்டது. | தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே ரூபா 316,715 வித்தியாசம் காணப்பட்டதற்கான காரணம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தக்கூடிய அனைத்து வகையிலும் கணக்கேடுகள் மற்றும் ஆவணங்களைப் பயன்படுத்தி பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டும் வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என குறிப்பிடுகிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டு பொருத்தமான வகையில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |